ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2054/51 - 2018 ජනවාරි මස 19 වැනි සිකුරාදා - 2018.01.19

2054/51ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தல் (திருத்தல்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர்கள் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ள இருக்கும் காணியின் விபரம் :**

காலி மாவட்டத்தில் நெலுவை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 233 பட்டுவங்கல கிராம அலுவலர் பிரிவில் பட்டுவங்கல கிராமத்தில் அமைந்துள்ள சு.வ.ப. இல. 472 உடைய இறுதிவரைபடத்தில் (மேலதிக இல. 21) காட்டப்பட்ட சுமார் 2.8330 ஹெக்டயார் விசாலமுடைய கீழே குறிப்பிடப்படும் காணி.

**1. துண்டு இலக்கம்: 770**

காணியின் பெயர்: குறுந்துவத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம் மற்றும் அடர்ந்த காடு விஸ்தீரணம்: 2.8330 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018, மே மாதம் 16 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நெலுவை பிதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்.

மேலும் 2018, மே மாதம் 02 ஆந் திகதி அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்டஈட்டு தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் எழுத்து மூலமாக இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சீ. பி.கே. ஜானக குருசிங்க,
பிரதேச செயலாளர்,
நெலுவை.

பிரதேச செயலகம்,
நெலுவை,
2018, சனவரி 11.

02 - 191



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*